**செய்தி வெளியீடு எண் : 1460** **நாள்:31.12.2021**

# <u>செய்தி வெளியீடு</u>

**பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு அறைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 30.12.2021 அன்று நள்ளிரவு நேரடியாக சென்று சென்னையில் பெய்த கனமழையின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, தேங்கியுள்ள மழைநீரை விரைந்து அகற்றிட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.12.2021 அன்று தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, நலத்திட்ட உதவிகளை வழங்கி, சென்னை திரும்பியவுடன், சென்னையில் பெய்த கனமழையின் காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மழைநீர் அகற்றும் பணிகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு அறைக்கு 30.12.2021 அன்று நள்ளிரவு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கட்டுப்பாட்டு அறையில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மழைநீர் தேக்கம் குறித்த புகார்கள் குறித்தும், அது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், கட்டுப்பாட்டு அறையில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து பணிகளில் ஈடுபட்டுள்ள பிற சேவை துறைகளான காவல் துறையினர், தீயணைப்பு துறையினர், சென்னை குடிநீர் வாரியம் மற்றும் மின் துறை சார்ந்த அலுவலர்களுடன் அவர்கள் துறை சார்ந்த புகார்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர், துணை ஆணையாளர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் ஆகியோருடன் மாநகரின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் அகற்றும் பணிகள் குறித்தும், இயக்கப்பட்டு வரும் மோட்டார் பம்புகள் குறித்தும் விரிவாக கேட்டறிந்து மீட்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும் தேவையான அளவிற்கு நீர் இறைக்கும் பம்புகள் கொண்டு உடனடியாக தேங்கிய மழைநீரை வெளியேற்றவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மோட்டார் பம்புகள் கொண்டு மழைநீர் வெளியேற்றப்படும் பணியையும், பெரியமேடு சைடனஹாம்ஸ் சாலையில் மசூதி அருகே தேங்கியுள்ள மழைநீரை மோட்டார் பம்பு கொண்டு வெளியேற்றப்படும் பணியையும் மற்றும் பாரிமுனை பிரகாசம் சாலை சந்திப்பில் தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றும் பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவாறு பாலங்களில் தேங்கியிருக்கும் மழைநீர் தேக்கத்தை அகற்றவும், இரயில்கள், பேருந்துகள் இயக்கும் நேரத்தை அதிகப்படுத்திடவும், மின்சாரம் தடையின்றி கிடைத்திடவும், அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அத்துடன், பொதுமக்களும் கவனமுடன் தங்கள் பயணத்தை அமைத்துக் கொள்வதோடு மழைக்கால வழிகாட்டுதல்களைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின் போது, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு, அரசு முதன்மை செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர்கள் திரு, விஷு மகாஜன், இ.ஆ.ப., (வருவாய் மற்றும் நிதி), டாக்டர் எஸ். மனிஷ், இ.ஆ.ப., (சுகாதாரம்), திருமதி டி. சினேகா,இ.ஆ.ப., (கல்வி), திரு. மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**